| அனுப்புநர் | பெறுநர் |
| --- | --- |
| முனைவர். நா.வளர்மதி, | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள், |
| முதல்வர், (பொ) | முதன்மைக் கல்வி அலுவலகங்கள், |
| மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி | அனைத்து மாவட்டங்கள். |
| நிறுவனம், இராணிப்பேட்டை. 632 401 | |

ந.க.எண். 80/அ2/2026 நாள். 17.02.2026

ஐயா/அம்மையீர்,

பொருள் ஆசிரியர் கல்வி – இராணிப்பேட்டை, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் – ஆசிரியர் தேர்வு வாரியத்தின் வாயிலாக தெரிவு செய்யப்பட்டு தற்போது பணி நியமனம் வழங்கப்பட்ட முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கான பயிற்சி – இயற்பியல் மற்றும் வணிகவியல் பாடங்களுக்கு 23.02.2026 - 25.02.2026 ஆகிய மூன்று நாட்கள் ஏலகிரியில் நடைபெறுதல் - ஆசிரியர்களைப் பணிவிடுவிப்பு செய்யக் கோருதல் – சார்பு

பார்வை சென்னை.6. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் அவர்களின் ந.க.எண்.44750/எஃப்3/2024 நாள்.14.02.2026.

---

பார்வையில் காணும் இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி, இராணிப்பேட்டை, மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், 2025 – 26 ஆம் கல்வியாண்டில் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் வாயிலாக தெரிவு செய்யப்பட்டு தற்போது பணி நியமனம் வழங்கப்பட்டுள்ள முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு பணியில் சேர்ந்த பின்னர் கற்றல் கற்பித்தல் மற்றும் அடிப்படை நிருவாகப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. புதியதாக நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு (Including 2 % Non Teaching) புகுநிலைப் பயிற்சியினை சென்னை, கோட்டூர்புரத்தில் அமைந்துள்ள அண்ணா நூற்றாண்டு விழா நூலகக் கட்டடத்தில் 18.02.2026 அன்று புதன்கிழமை காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களது முன்னிலையில் அளிக்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து மண்டல அளவில் பாடவாரியாக தனித்தனியாக பயிற்சி வழங்கப்படவுள்ளது. இராணிப்பேட்டை மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இயற்பியல் மற்றும் வணிகவியல் ஆகிய பாடங்களுக்கு கீழ்க்காணும் அட்டவணையின் படி பயிற்சி நடைபெறவுள்ளது. எனவே, அனைத்து மாவட்டங்களிலும் புதியதாக பணிநியமனம் செய்யப்பட்டுள்ள இயற்பியல் மற்றும் வணிகவியல் பாட ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியலினை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள Google Sheet -இல் 19.02.2026 , மாலை 5.00 மணிக்குள் பூர்த்தி செய்வதுடன் , அவர்களை உரிய நேரத்தில் பயிற்சியில் கலந்து கொள்ளும் வகையில் பணியிலிருந்து விடுவிக்க சார்ந்த கல்வி அலுவலர்கள் வாயிலாக உரிய தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

| வ.எண் | பாடம் | ஆசிரியர்களின் எண்ணிக்கை | பயிற்சி நடைபெறும் இடம் | நாள் |
|---|---|---|---|---|
| 1 | இயற்பியல் | 205 | AGS Holiday Resort, Yelagiri , Tirupattur | 23.02.2026 - 25.02.2026 |
| 2 | வணிகவியல் | 158 | | |

இணைப்பு.

Google Link

முதல்வர்(பொ)

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,

இராணிப்பேட்டை.

நகல்.

1 சென்னை-6 மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு தகவலுக்காக பணிந்து அனுப்பலாகிறது.

2 அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி/இடைநிலைக் கல்வி) அவர்களுக்கு தொடர் நடவடிக்கைக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.